இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 28.05.2026

குதிரை வேக குதிரை பேர ஆட்சி!

'குதிரை வேக குதிரை பேர ஆட்சி இது' என்று தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லி இருப்பதுதான் நூற்றுக்கு நூறு உண்மை ஆகும்.

தனது நாற்காலியைத் தக்க வைப்பதற்காக அனைத்து கேவலமான முறைகளையும் பயன்படுத்தி வருகிறார் முதலமைச்சர் விஜய்.

நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் ஆட்சி அமைக்கும் பெரும்பான்மையை தமிழ்நாட்டு மக்கள் வழங்கவில்லை. தி.மு.க. எதிர்க்கட்சியாகச் செயல்படும் என்றும் ஆட்சி அமைக்கும் த.வெ.க.வுக்கு இடையூறாக இருக்காது என்றும் தொடக்கத்திலேயே தி.மு.க. தலைவர் தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினார்.

தி.மு.க. கூட்டணியில் வென்ற காங்கிரஸ் கட்சி, உடனடியாக த.வெ.க. ஆதரவு நிலைப்பாட்டை எடுத்து விலகியது. தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள், 'இன்னொரு தேர்தல் வரக்கூடாது' என்பதால் ஆட்சியை ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுத்தன. ஆனாலும், 'கொள்கை அளவில் தி.மு.க. கூட்டணியில் தொடர்வதாகவும்' அறிவித்தன. பின்னர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியும் அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளன. இதன் மூலமாக பெரும்பான்மையை நிரூபிக்கும் வலிமையை விஜய் பெற்றார். அத்தோடு அமைதியாக அவர் இருந்திருக்க வேண்டும்.

இவை போதாது என்று அ.தி.மு.க.வை உடைக்கும் செயலை விஜய் செய்தார். அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களில் 25 பேரை தனியாக ஆக்கி அவர்களை தங்களது ஆட்சிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் வாக்களிக்க வைத்தார். **'அமைச்சர் பதவி தருகிறோம், வாரியத் தலைவர் பதவி தருகிறோம் என்று ஆசை வார்த்தை காட்டப்படுவதாக'** சட்டமன்றத்திலேயே எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டி இருக்கிறார். இது அவைக் குறிப்பில் பதிவாகி இருக்கிறது. எந்தக் கீழ்த்தரத்துக்கும் விஜய் கட்சி இறங்கும் என்பதை எடப்பாடி பழனிசாமி போட்டு உடைத்தார்.

அ.தி.மு.க. கூட்டணியில் இடம் பெற்ற அம்மா மக்கள் முன்னேற்றக் கழகத்தின் ஒரு உறுப்பினரையும் தங்களுக்கு ஆதரவானவராக மாற்றினார்கள். அதில்தான் எத்தனை நாடகங்கள் நடந்தன?

டி.டி.வி. தினகரன் தனது கட்சியின் ஒரு எம்.எல்.ஏ.வைக் காணோம் என்றும், எனது கையெழுத்தை அவர் போட்டுள்ளார் என்றும் ஆளுநரிடம் மனு தருகிறார். கிண்டி காவல் நிலையத்திலும் புகார் தருகிறார். 'நான் போகவில்லை' என்று அந்த எம்.எல்.ஏ.வே பேட்டி தருகிறார். பின்னர் அவரே விஜய் ஆதரவாளராக மாறுகிறார். அந்த எம்.எல்.ஏ.வை கட்சியை விட்டு நீக்கிவிட்டார் டி.டி.வி. தினகரன். அப்படியானால் தினகரன் கட்சி எம்.எல்.ஏ.வுக்கு தரப்பட்ட வாக்குறுதி என்ன?

'முதலமைச்சரைச் சந்திக்க முகத்தை மூடிக் கொண்டு சென்றது யார்?' என்று சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய்க்கு நேராகக் கேள்வி கேட்டார் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த். சபையில் உட்கார்ந்து இருந்த முதலமைச்சர் விஜயால் பதில் சொல்ல முடியவில்லை.

இப்படி ஓட்டுப்போட்ட கந்தல் துணியைப் போல ஒரு ஆட்சியை அமைத்து விட்டு, ஆட்சியை ஒழுங்காக நடத்தாமல் சட்டம் ஒழுங்கை சந்தி சிரிக்க விட்டு, மிகமிக ஏமாற்றத்தை வாக்களித்த மக்களுக்கு கொடுத்து வருகிறார் விஜய்.

தினந்தோறும் கொலைகள், பாலியல் வன்முறைகள், நிர்வாகச் சீர்கேடுகள், மின்வெட்டுகள், அதிகார துஷ்பிரயோகங்கள். இவை தான் நாம் பார்க்கும் காட்சிகள் ஆகும். சமூக வலைதளங்களைத் திறந்தாலே இந்த ஆட்சி மீதான ஆக்ரோஷமான எதிர்ப்புக் குரல்கள்தான் அதிகம் ஒலிக்கிறது. இவை எதுவும் விஜய் காதில் விழுந்ததாகத் தெரியவில்லை.

நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த முனையவில்லை. மாறாக ஆடிக் கொண்டிருக்கும் தனது நாற்காலியைச் சரி செய்வதிலேயே அவர்களது எல்லாக் கவனமும் இருக்கிறது. அ.தி.மு.க. சார்பில் வென்று, அ.தி.மு.க.வின் நிலைப்பாட்டுக்கு மாறாக த.வெ.க. ஆட்சியை ஆதரித்து வாக்களித்த மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி விலக வைக்கப்பட்டுள்ளார்கள். பதவி விலகலைக் கொடுத்த சில நிமிடங்களில் அவர்கள் த.வெ.க.வில் இணைந்துள்ளார்கள். எதற்காக அவர்கள் பதவி விலக வைக்கப்பட்டுள்ளார்கள்? குதிரை பேரத்தால் உருவான ஆட்சி என்று அனைத்து அரசியல் கட்சிகளும் சொன்னார்கள். அது சரி தான் என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் பதவி, வாரியத் தலைவர் பதவி என்று ஆசை வார்த்தை கூறி அழைத்து வரப்பட்டு, ஆட்சிக்கு ஆதரவாக வாக்களிக்க வைக்கப்பட்டவர்கள் மீண்டும் அ.தி.மு.க.வில் இணைகிறார்கள். இன்னொரு தரப்பு தனது பதவியை விட்டு விலகி த.வெ.க.வில் இணைகிறது. இவர்கள் அனைவரும் சேர்ந்து ஆதரித்த ஆட்சி செல்லத்தக்க ஆட்சியா? நம்பிக்கைக்குரிய ஆட்சியா? ரகசிய பேரங்களால் உருவாக்கப்பட்ட ஆட்சி இது. இந்த ஆட்சி மக்களைப் பற்றி கவலைப்படாது. தன்னைக் காப்பாற்றிக் கொள்வதிலேயே காலத்தைப் போக்கிக் கொள்ளும். இது மக்களுக்கான ஆட்சி அல்ல. அவர்களைக் காப்பாற்றிக் கொள்ளும் ஆட்சியே ஆகும்.

த.வெ.க. ஆட்சி அமைக்க ஆதரித்து வாக்களித்த அ.தி.மு.க.வைச் சேர்ந்த 5 உறுப்பினர்கள் மீண்டும் எடப்பாடி பழனிசாமி தலைமையை ஏற்றுக் கொண்டு போய்விட்டார்கள். த.வெ.க.வை ஆட்சி அமைக்க ஆதரித்து வாக்களித்த 3 உறுப்பினர்கள் தங்களது பதவியை விட்டு விலகி இருக்கிறார்கள். இதன் மூலமாக ஆட்சிக்காக ஆதரவளித்த 8 வாக்குகள் குறைந்துள்ளது. இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் குறையவே செய்யும்.

சபாநாயகரின் அறைக்கு போய் பதவி விலகுகிறார்கள். அமைச்சர் அறைக்குச் சென்று கட்சியில் சேர்கிறார்கள். இதைவிடக் கேவலம் இருக்க முடியுமா?

விஜய் கூறிய தூய அரசியல் மடிந்து விட்டது. தொடக்கத்திலேயே முடிந்து விட்டது. குதிரை பேரங்கள் மூலமாக ஆட்சியைத் தக்க வைக்க நினைக்கும் விஜய்யை மக்களே விரட்டுவார்கள்.

அரசு குடியிருப்பு வழங்குவதில் சாதியப் பாகுபாடு காட்டுவதா?

முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் த.வெ.க. அரசுக்குக் கண்டனம்!

சென்னை, மே 28-

அரசு அடுக்குமாடி குடியிருப்பு வீடுகளை பொதுமக்களுக்கு வழங்குவதில் த.வெ.க. அரசு சாதியப் பாகுபாடு காட்டுவதை கண்டித்து முன்னாள் அமைச்சரும், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளருமான மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

பன்னெடுங்காலமாய் சென்னையின் பல்வேறு பகுதிகளில் ஒழுகும் ஓலை குடிசைகளில் மக்கள் வசித்து வந்த நிலையை மாற்றிட முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான தி.மு.க. அரசு 1970 ஆம் ஆண்டு "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்!" என்கிற முழக்கத்துடன் 'தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்' என்கிற அமைப்பினை உருவாக்கியது.

அதன் மூலம் சென்னையில் அடர்த்தியான குடிசைகள் நிரம்பிய பகுதிகளில் வசித்த மக்களுக்கு மாற்றிடம் ஒதுக்கிவிட்டு அங்கே அனைத்து வசதிகளுடன் கூடிய அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டித் தந்து, அவர்களை அந்த அடுக்கு மாடிக்குடியிருப்புகளில் அமர்த்தி அழகு பார்த்தது.

இந்தத் திட்டம் சென்னையில் பல்வேறு இடங்களில் செயல்பட்டு வந்தது. இதில் கட்டி முடிக்கப்பட்டு ஏறத்தாழ 30 அல்லது 35 ஆண்டுகள் பழமையான கட்டிடங்களை அகற்றிவிட்டு மீண்டும் அதே பகுதியில் புதிய குடியிருப்புகளை ஏற்கனவே இருந்ததைவிட அதிக வசதியுடன் நவீனமான முறையில் கட்டித் தருவதற்கு நம்முடைய திராவிட மாடல் முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டார்.

அந்த ஆணையின் பெயரில் சென்னை சைதாப்பேட்டை தொகுதியில் கோட்டூர்புரம், வாழைத்தோப்பு, சுப்புப் பிள்ளை தோட்டம், அப்பாவு நகர் ஆகிய பகுதிகளில் பல நூறு கோடி ரூபாய் செலவில் ஏறத்தாழ 2700 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு தேர்தல் அறிவிப்புக்கு முன்னர் கடந்த மார்ச் மாதம் 2ஆம் நாள் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிலையில் தமிழக சட்டமன்றத்திற்கு தேர்தல் அறிவிக்கப்பட்டக் காரணத்தால் கட்டிமுடிக்கப்பட்டு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட வீடுகள் ஒதுக்கீடுதாரர்களுக்கு வழங்குகிற பணி தடைபட்டுப் போயிற்று. இதற்கிடையில் புதிய ஆட்சி வந்த சூழலில் கட்டி முடிக்கப் பட்ட வீடுகள் குடியிருப்புதாரர்களுக்கு வழங்குகிற பணி குடிசை மாற்று வாரிய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டது.

குடியிருப்புதாரர்களுக்கு வீடு வழங்கப்படுகிற நேரத்தில் மாற்றுத் திறனாளிகள் வயது மூத்தவர்கள் மற்றும் கடும் நோயினால் பாதிக்கப் பட்டவர்கள் தவிர்த்த மற்றவர்கள் அனைவருக்கும் பொதுக்குலுக்கல் முறையில் வீடுகள் தேர்வு செய்து தரப்படும் என்று நாம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த நேரத்தில் உறுதி அளித்திருந்தோம்.

தற்போது ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில் "தலித் மக்கள் குடி யிருக்கும் குடியிருப்புகளில் எங்களுக்கு வீடு வேண்டாம். எங்களுக்கென்று ஒரு பிளாக்கை தனியாக ஒதுக்கீடு செய்து தர வேண்டும்!" என்று ஒரு சமூகத்தினர் கேட்டு வந்தனர். அதற்கு த.வெ.க சட்டமன்ற உறுப்பினர் ஆதரவாக இருக்கிற காரணத்தினால் குடிசை மாற்று வாரிய அதிகாரிகளும் இந்தச் செயலுக்கு துணை போவதாகத் தெரிகிறது.

சாதிப் பாகுபாடு கூடாது என்று சமத்துவபுரங்களை கட்டித் தந்த கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்ட குடிசை மாற்று வாரிய குடியிருப்பு ஒதுக்கீட்டில் சாதிப் பாகுபாடு காட்டுவது என்பது மிகப்பெரிய குற்றமாகும். இது உடனடியாக தடுக்கப்பட்டாக வேண்டும். அனைவருக்கும் பொதுவான நிலையில் குலுக்கல் நடைபெற்று சுமூகமாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்வதுடன் இத்தகைய போக்கினை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவர்

முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை நல உதவிகளை வழங்கி சிறப்பாகக் கொண்டாடுவோம்!

தி.மு.க. விவசாய அணி நிர்வாகிகள் கூட்டத்தில் தீர்மானம்!

சென்னை, மே 28-

தி.மு.க. விவசாய அணி மாநில நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் நேற்று முன்தினம் (26.5.2026-செவ்வாய்க் கிழமை) காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், கழக விவசாய அணித் துணைத் தலைவர்கள் விவசாய அணி இரா.தமிழ்மணி தலைமையில் விவசாய அணி இணைச் செயலாளர்கள் எஸ்.அப்துல் காதர், கள்ளிப்பட்டி மணி, ம.முத்துராம லிங்கம், பா. செந்தமிழ்ச் செல்வன், குறிஞ்சி என்.சிவகுமார் துணைச் செயலாளர்கள் ஆர். டி.ஏ.ஆதி சேஷன், மதுரை ஆர்.கணேசன், டேம் வெங்கடேசன், நல்லசேதுபதி, டி. எம்.அரியப்பன், சூடப்பட்டி சுப்பிரமணி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் கழக விவசாய அணிச் செயலாளர் ஏ. கே.எஸ்.விஜய்ன் வரவேற்புரையாற்றியதோடு, இன்றைய அரசியல் சூழல் குறித்து விரிவுரையாற்றினார்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:-

உலகத் தமிழர்களின் ஒப்பற்றத் தலைவரும் - இந்திய அரசியலின் மூத்த தலைவராகவும் - கலை, இலக்கியம், பத்திரிக்கை என அனைத்து துறைகளையும் தன் வசப்படுத்தி வரலாற்று சாதனை படைத்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்த நாளை விழாவினை தி.மு.க. விவசாய அணியின் சார்பாக மாநிலம் முழுவதும் உள்ள விவசாய அணியின் மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள், அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்களின் ஆலோசனைகளைப் பெற்று, கழகக் கொடியேற்றி ஏழையெளியோர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி மிகச் சிறப்பாக நடத்திட வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

வாக்களித்த மக்களுக்கு நன்றி!

நடந்துமுடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு. கழகம் மீதும், கழகத் தலைவர் அவர்கள் மீதும் நம்பிக்கை வைத்து தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு வாக்களித்த 1 கோடியே 54 லட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்காளர்களுக்கு இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

கழகத் தலைவருக்கு நன்றி!

நடைபெற்று முடிந்த சட்டமன்ற பொதுத் தேர்தலில், கொள்கை உறுதியோடு மதச்சார்பின்மை சக்திகளை ஒன்றிணைத்து 'மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியை' உருவாக்கி, தேர்தல் களத்தில் நம்மையெல்லாம் வழிநடத்தி, முதன்மை தொண்டராய் ஓய்வில்லாமல் உழைத்து, 73 சட்டமன்றத் தொகுதிகளில் நம் கழகக் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றிபெற முதன்மை காரணமாக விளங்கிய நம் கழகத் தலைவர் அவர்களுக்கு இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

எதிர்க்கட்சித் தலைவருக்கு பாராட்டு - நன்றி!

2026 தேர்தல் களத்தில் ஓய்வின்றி தமிழ்நாடு முழுவதும் சூறாவளி சுற்றுப் பயணம் செய்து 73 சட்டமன்றத் தொகுதிகளில் தி.மு.க. கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை வெற்றி பெற பாடுபட்ட கழக இளைஞர் அணிச் செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இந்தக் கூட்டம் தனது மனமார்ந்த பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறது.

பயிர் கடனை தள்ளுபடி செய்க!

த.வெ.க. தலைவர் விஜய் தனது தேர்தல் அறிக்கையில் 5 ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகளுக்கு முழு கடன் தள்ளுபடியும் - 5 ஏக்கருக்கு மேல் உள்ள விவசாயிகளுக்கு கடனில் 50 சதவிதம் தள்ளுபடியும் செய்யப்படும் என்று உறுதி அளித்துவிட்டு, இப்பொழுது 5000 ரூபாய்தான் தள்ளுபடி என்கிற மோசடியை இக்கூட்டம் வன்மையாக கண்டிக்கிறது. தேர்தல் அறிக்கையில் கூறியபடி விவசாயிகளுக்கான பயிர் கடன் தள்ளுபடி செய்திட இந்த கூட்டம் தமிழக அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.

மேகதாது அணை பிரச்சினைக்குத் தீர்வு!

மேகதாது அணை தொடர்பான திட்ட அறிக்கை தயாரிக்க கர்நாடக அரசுக்கு தடை விதிக்க மறுத்தபோது, அன்று தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த கழகத் தலைவர் அவர்கள் தலைமையிலான கழக அரசு உடனடியாக உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்தது. அம்மனு மீது தற்போது மேகதாது அணைக்கு திட்ட அறிக்கை தயாரிக்க தடை விதிக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

கோரிக்கையினை நிறைவேற்றுவீர்!

ஆளும் த.வெ.க. அரசு காங்கிரஸ் கட்சியின் தயவோடுதான் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்திருக்கிறது என்பதை தமிழ்நாட்டு மக்கள் நன்கறிவார்கள். காங்கிரஸ் கட்சியின் தயவில் ஆட்சி செய்வதால், தமிழர்களின் உரிமையை விட்டுக் கொடுக்கப் போகிறதா த.வெ.க. அரசு..? என்ற கேள்வி காவிரி டெல்டா விவசாயப் பெருங்குடி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அந்த அச்சத்தை போக்கி, காவிரி டெல்டா மக்களின் உயிர்வாழ்வாதார பிரச்சினையான மேகதாது அணை பிரச்சினையில் ஆளும் த.வெ.க. அரசு உடனடியாக தீர்வு காண வேண்டும் என தி.மு.க. விவசாய அணியின் இக்கூட்டம் மாநில அரசை கேட்டுக் கொள்கிறது.

ஒன்றிய பா.ஜ.க. அரசின் தவறான வேளாண் கொள்கைகளால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு ரசாயன உரங்களின் கடுமையான விலை உயர்வு மேலும் ஒரு பேரிடியாகும். எனவே, ஒன்றிய பா.ஜ.க. அரசின் இந்த உரவிலை உயர்வை தி.மு.க. விவசாய அணி வன்மையாக கண்டிப்பதோடு, உடனடியாக உயர்த்தப்பட்ட ரசாயன உரங்களின் விலையை ரத்து செய்திட வேண்டுமென ஒன்றிய பாஜக அரசை இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

பொள்ளாச்சி பரம்பிகுளம் ஆழியார் திட்டத்தில் பி.ஏ.பி.வாய்க்காலை தூர்வார 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டும் என்று விவசாயிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, கழகத் தலைவர் அவர்களும் 10 கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்து கடைமடை பகுதி வரை தண்ணீர் கொண்டு செல்லப்பட்டது. அதன்படியே, தற்போது பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசின் அமைச்சரை விவசாயிகள் நேரில் சந்தித்து இந்த ஆண்டும் தூர்வார 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திட வேண்டுமென கோரிக்கை வைத்தும் இதுநாள் வரை நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே, பிஏபி கால்வாய் தூர்வாரும் பணிக்கு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, அப்பகுதி விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென இக்கூட்டம் மாநில அரசை வலியுறுத்துகிறது.

பிஏபி திட்டத்தில் இன்னும் நிறைவேற்றப்படால் உள்ள ஆனைமலையாறுநல்லாறு அணை திட்டங்களை கேரள அரசுடன் பேச்சுவார்த்தை உடனடியாக நடத்தி நிறைவேற்ற வேண்டும் என்றும், பிஏபி திட்ட கால்வாய்கள் முழுமையாக புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ள 4500 கோடி ரூபாயில் திட்ட அறிக்கை தயார் செய்து அரசின் பரிசீலனையில் உள்ளது. போர்க்கால அடிப்படையில் நிதி ஒதுக்கிடு செய்து, தற்போது பொறுப்பேற்றுள்ள த.வெ.க. அரசு நடவடிக்கை எடுத்திட இக்கூட்டம் வலியுறுத்துகிறது.

மேட்டூர் அணை திறப்பு!

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமான டெல்டா பகுதியில் குறுவை சாகுபடி செய்வதற்கு, 2021ஆம் ஆண்டு பதவியேற்ற நாள் முதல் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 12ஆம் நாள் மேட்டூர் அணையினை திறந்து, கடைமடை பகுதி வரை காவிரி நீர் அடைந்து, டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தியதைப் போலவே, தற்போது புதியதாக பொறுப்பேற்றுள்ள த.வெ.க.அரசு, இந்த ஆண்டும் ஜூன்12 அன்று மேட்டூர் அணையிலிருந்து குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறந்துவிட வேண்டுமென இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குன்னம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மேனாள் அமைச்சர், அரியலூர் மாவட்டக் கழகச் செயலாளர் குன்னம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.சிவசங்கர் குன்னம் தொகுதி மக்களிடம் நன்றி தெரிவித்தார். உடன் மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், ஒன்றிய கழக பொறுப்பாளர் என்.கிருஷ்ணமூர்த்தி, தே.மு.தி.க. மாவட்ட செயலாளர் அய்யப்பன், ஒன்றிய பொறுப்பாளர் சி.இராஜேந்திரன் தே.மு.தி.க. ஒன்றிய செயலாளர் செல்வராஜ், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள், கழக தோழர்கள் பலரும் கலந்துகொண்டனர்.